# FIRST INFORMATION REPORT
# முதல் தகவல் அறிக்கை

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093890

1. District மாவட்டம் : திருச்சிராப்பள்ளி PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 01/2020 Date: நாள் 06.03.2020

2. (i) Act சட்டம்: The prevention of Corruption Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7(a)
 (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
 (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
 (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 03.03.2020 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
 Time Period : நேர அளவு 1745hrs Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
 (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 06.03.2020 Time : நேரம் 1100hrs
 (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Complaint in Tamil

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 5KM வடக்கு அரியமங்கலம் கோட்டம்
 Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி அலுவலகம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்).
 (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ரா. செந்தில்குமார் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ராஜு
 (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 01/02/1985 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
 Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
 (f) Occupation : தொழில் Machine operator, Rane Trichy (g) Address : முகவரி 262, புதிய தெரு, உக்கடை அரியமங்கலம், திருச்சிராப்பள்ளி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. பிரகாஷ், இளநிலை உதவியாளர், அரியமங்கலம் கோட்டம் அலுவலகம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— காலதாமதம் —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.</u>

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 06.03.2020 பணியில் இருந்த போது முற்பகல் 11.00 மணியளவில் திருச்சி, அரியமங்களம், உக்கடை, பவள நகர், எண்.262-இல் வசித்து வரும் ராமு மகன் செந்தில்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாநகராட்சி அரியமஙகலம் பகுதிக்குரிய வருவாய் உதவியாளர் திரு.முருகன் மற்றும் புகார்தாரர் திரு.செந்தில்குமார் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று 06.03.2020 மதியம் 13.00 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.1/2020 சட்டப்பிரிவு 7 (a)ஊழல் தடுப்பு (Amendment) சட்டம் 2018-ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. திருச்சி 06-03-2020 அனுப்புநர் ரா.செந்தில்குமார், த/பெ ராமு, 262, பவள நகர், உக்கடை, அரியமஙகலம்,

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. Senthilkumar 06/03/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 06/03/2020
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் P. [signature] Inspector of Police
Rank: நிலை .................... No. எண் .......... VIAC, Trichy

திருச்சி ஊ.த.க. பிரிவு கு.எண்.01/2020ன் முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி.......

திருச்சிராப்பள்ளி. பெறுநர் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, திருச்சி. அய்யா, நான், திருச்சி, அரியமங்கலம், உக்கடை, பவளநகரில், குடும்பத்துடன் வசித்து வருகிறேன். 12ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். விராலிமலை, ரானே கம்பெனியில் மிஸின் ஆப்ரேட்டராக வேலை செய்கிறேன். நான் பாபு த/பெ அன்சாரி பாஷா, 262,பவள நகர், உக்கடை, அரியமங்கலம், திருச்சிராப்பள்ளி மற்றும் அவரது மனைவி ஹசன்பானு க/பெ பாபு ஆகியோர் பெயரில் 262, பவள நகர், உக்கடை அரிமங்களம், திருச்சிராப்பள்ளி என்ற முகவரியில் அவர் கட்டியிருந்த தரைதளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய 650 சதுர அடியுடன் கூடிய வீட்டினை கடந்த 2018 ஆம் ஆண்டு விலைக்கு வாங்கி அதனை திருச்சி, கோட்டை பத்திர பதிவு அலுவலகத்தில் எனது பெயரிலும், எனது மனைவி செ.நந்தினி பெயரிலும் ஆவண எண்.2278-ன் படி 18.06.2018 அன்று பதிவு செய்தேன். பின்னர் அந்த வீட்டிற்கான குடிநீர் வரி ரூ.960/-ஐ மட்டும் முன்னாள் வீட்டின் உரிமையாளர்கள் பாபு மற்றும் ஹசன்பானு பெயரிலே பாலக்கரையில் உள்ள திருச்சி மாநகராட்சியின், அரியமங்களம் மண்டல ஆபீஸில் 05.09.2019 அன்று 2ஆம் அரையாண்டிற்கான கட்டணத்தை செலுத்தி ரசீது பெற்றேன். மேலும், சொத்து வரி தண்ணீர் வரியினை எனது பெயரிலும் எனது மனைவி பெயரிலும் சொத்து வரிக்கு பெயர் மாற்றம் செய்ய ரூ.300/-ம் தண்ணீர் வரிக்கு பெயர் மாற்றம் செய்ய ரூ.250/-ம் பாலக்கரையில் உள்ள திருச்சி மாநகராட்சியின் அரியமங்களம் பகுதிக்குரிய ஆபிஸில் செலுத்தி அன்றைய தினமே மனு செய்து ரசீது பெற்று எங்கள் பகுதிக்குரிய பில் கலெக்டர் திரு.முருகனை சந்தித்து நான் பெயர் மாற்றம் செய்ய மனு கொடுத்தது பற்றியும் பெயர் மாற்றம் செய்வதற்கு கட்டணம் செலுத்தியது பற்றியும் தெரிவித்தேன். அதற்கு அவர் உங்கள் பெயரில் பெயர் மாற்றம் ஆகிவிடும் என்று கூறினார். பின்னர், 02.03.2020 அன்று நான் வரி கட்டுவதற்கு பாலக்கரையில் உள்ள திருச்சி மாநகராட்சியின் மண்டல அலுவலகம் சென்ற போதுதான் மேற்கண்ட வீட்டிற்குரிய சொத்து வரி மற்றும் தண்ணீர் வரியும் எங்கள் பெயரில் மாறவில்லை என தெரிந்து கொண்டேன். அதனால், மேற்படி பில் கலெக்டர் முருகனிடம் 03.03.2020 அன்று மாலை சுமார் 05.45 மணியளவில் பாலக்கரையில் உள்ள திருச்சி மாநகராட்சியின் மண்டல அலுவலகத்தில் அவரது இருக்கையில் சென்று பார்த்து கேட்ட போது, என்னப்பா உலகம் புரியாத ஆளா இருக்க, நீ பாட்டுக்க பீஸ கட்டிட்டு போனா போதுமா, என்ன கவனிக்கலன்னா எப்படி வேலை நடக்கும்னு சொன்னார். நான் போன வருடம் சொத்து வரி மற்றும் தண்ணீர் வரிக்கு பெயர் மாற்றுவதற்கு பணம் கட்டி ரசீது வச்சிருக்கேன் என்று சொன்னதற்கு அதெல்லாம் சரிப்பா உன் மேட்டர் நான் விசாரிச்சு அனுப்புவதற்கு எனக்கு மட்டும் நீ தனியா ரூ.4000/- கொடுக்கனும் அப்பதான் உன் பெயருக்கு பெயர் மாற்றும் வேலை நடக்கும் இல்லாட்டி இன்னும் எவ்வளவு நாளானாலும் உன் வேலை நடக்காது என்றார். எனக்கு லஞ்சம் கொடுக்க இஷ்டமில்லை

இருந்தாலும் அப்போதைக்கு சரி என்று சொல்லிவிட்டு பிறகு பணத்துடன் வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனக்கு எனது அலுவலகத்தில் வேலைப்பளு அதிகமாக இருந்த காரணத்தால் என்னால் கடந்த இரண்டு நாட்களாக புகார் கொடுக்க வரமுடியவில்லை. எனவே, என்னிடம் எனது பெயரிலும் எனது மனைவி பெயரிலும் சொத்து வரி மற்றும் தண்ணீர் வரி பெயர் மாற்றம் செய்ய எங்களது மனுவை விசாரித்து மேலதிகாரிக்கு அனுப்புவதற்கு லஞ்சம் கேட்ட பில் கலெக்டர் திரு.முருகன் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd.xxx (R.Senthilkumar) 06/03/2020 Submitted to the Court of Hon'ble Special Judge for the Prevention of Corruption Act 1988 cases, Trichy:-. Received this report today (06.03.2020) at 11.00 hrs. made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.1/2020 u/s 7(a) of the Prevention of Corruption (Amendment) Act 2018 at 13.00 hrs on 06.03.2020. Sd.xxx (P.Aruljothi) 06.03.2020 Inspector of Police, V&AC, Trichy.

Jema
06/03/2020
Inspector of Police,
V&AC, Trichy.